## சமூக வலைதளத் தந்திரங்களைப் பயன்படுத்தி வென்றுள்ளனர்!

# எப்போதும் மெத்தனமாக இருக்காமல் அசுர வேகத்தில் பணியாற்ற வேண்டும்!

## திருச்சி செயல்வீரர்கள் கூட்டத்தில் - கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி, மே 30-

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் மத்திய, வடக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவருமான கே. என்.நேரு முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-



திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகங்களில் ஜூன் 3ம் தேதி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் அன்று கழக கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கி, கலைஞரின் வரலாற்றுச் சாதனைகளை சமூக வலைதளங்களில் வீடியோக்களாக பதிவிட்டு இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பது. தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கழக முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். அவர்களை நியமித்த கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கடந்த தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த திருச்சி மாவட்ட வாக்காள பெருமக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கழக முதன்மைச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு உரையாற்றுகையில்..

சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் குறித்தும், கழகத்தின் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்தும் விளக்கினார்.

தி.மு.க. இன்றும் தனித்து நின்று களம் காணும் நிலையில் உள்ளது. நம்முடன் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் இதர தோழமைக் கட்சிகள், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்ற காரணத்திற்காகத் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றனர். ஆனால், காங்கிரஸ் போன்ற கட்சிகள் முந்தைய காலங்களில் நம்மை இக்கட்டான நிலைக்குத் தள்ளிச் சென்ற வரலாறும் உண்டு. தற்போதைய தேர்தல் முடிவுகளைப் பார்த்தால், நமக்கும் எதிர்தரப்பிற்கும் உள்ள வாக்கு வித்தியாசம் வெறும் 17 லட்சம் தான். 27 தொகுதிகளில் நாம் 1,000 முதல் 2,000 வாக்குகள் என்ற மிகக் குறைந்த வித்தியாசத்திலேயே வெற்றியைத் தவறவிட்டிருக்கிறோம். தேர்தல் இன்னும் சில நாட்கள் முன்னதாக நடந்திருந்தால் வெற்றி வாய்ப்பு நமக்கே சாதகமாக இருந்திருக்கும். கடைசி மூன்று நாட்களில் வீசிய ஒரு மாற்றுக் காற்றினால் இந்தச் சிறிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

முன்பு தி.மு.க. அதிமுக என்றிருந்த போட்டி, இன்று ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சியான நமக்கும் இடையிலான போட்டியாக மாறியிருக்கிறது.

தமிழக வெற்றிக்கழகம் போன்ற புதிய வரவுகள் வாக்குகளைப் பிரித்துள்ளன. அ.தி.மு.க. கூட்டணியின் வாக்குகள் எங்கு திரும்பும் என்ற கணக்கும் உள்ளது. குறிப்பாக, சமூக வலைதளங்களை மிகத் தந்திரமாகப் பயன்படுத்தி, இளைய தலைமுறை மற்றும் குடும்பங்களிடம் அவர்கள் நேரடியாகச் சென்றடைந்து வாக்குகளைப் பெற்றுள்ளனர். நாம் அவர்களை ஒரு பொருட்டாகக் கருதாமல் இருந்த நேரத்தில் அவர்கள் இந்தத் தந்திரத்தால் முன்னேறியுள்ளனர். கழகத்தை மீண்டும் வலுப்படுத்த முத்தமிழறிஞர் கலைஞர் என்ற பெயரே மிகப் பெரிய ஆயுதம் உள்ளது. ஜூன் 3ஆம் தேதி கலைஞரின் 103 வது பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு கிளைக்கழகத்திலும் கழகக் கொடியேற்றி, பள்ளி மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும். கலைஞரின் புகழையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதன் மூலமே நாம் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்க முடியும்.

அமைச்சராக எனக்கு இருக்கும் பொறுப்பை விட, களத்தில் நிற்கும் ஒன்றியக் கழகச் செயலாளர்களுக்குப் பொறுப்பு அதிகம். கட்சி இக்கட்டான சூழலில் இருந்தபோது திருச்சி மாவட்டம் தான் எப்போதும் அரணாக நின்று வெற்றியைத் தேடித்தந்தது. அதேபோல், இப்போதும் மெத்தனமாக இருக்காமல் அசுர வேகத்தில் பணியாற்ற வேண்டும் என்றார்.

இந்த கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, ஸ்டாலின் குமார், அன்பில் பெரியசாமி மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், உள்ளிட்ட ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

## தளபதி முருகேசன் தலைமை! ஞானசேகரன் வரவேற்புரை!

# கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழுக் கூட்டம்!

## திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி சிறப்புரை!

கோவை, மே 30 -

கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் இன்று (30.05.2026 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் சூலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகிக்கிறார்.

கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

சீரபாளையம் செந்தில் குமார், கேபி சண்முகம், பிச்சனூர் அருள்ராஜ், வழக்கறிஞர் பஞ்சலிங்கம், வால்பாறை ரவிச்சந்திரன், ஆலாம்பாளையம் சிவசங்கரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆலோசனைகள் வழங்கி திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி (கழக மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்) சிறப்புரையாற்றுகிறார்.

அதுபோது

1) ஜூன் 3 தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா.

2) ஆதிதிராவிடர் மற்றும் அருந்ததியர் பகுதியில் இயக்கத் தோழர்களை உறுப்பினர்களாக சேர்த்தல் தொடர்பாக.

எனவே மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழுவிற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெறுகிறது!

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் அறிவிப்பு!

திருவள்ளூர், மே 30-

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அவசர ஆலோசனைக் கூட்டம், வரும் 01-06-2026 திங்கள்கிழமை மாலை 5.30 மணியளவில் பூவிருந்தவல்லியில் உள்ள ஹரிகரன் ரெசிடென்சியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் தலைமை வகித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார். மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் க.பிரபு கஜேந்திரன், ப. அப்துல்மாலிக், முன்னிலை வகிக்கின்றனர். நகரக் கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை வரவேற்புரை ஆற்றுகிறார்.

இந்த கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ. ரமேஷ், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சி. ஜெரால்டு, ம.இராஜி, வி. ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார் உள்ளிட்டோரும், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி. குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

மேலும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர். செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி மா.செ.ராஜேஷ், டி.பிரியாகுமார், எஸ். சதீஷ்குமார் மற்றும் ஆவடி மாநகர இளைஞர் அணி நிர்வாகிகள் ஜி.துர்கா பிரசாத், இள.ஸ்ரீதர், முஸ்தபா அஃப்ரிடி, சதீஷ்குமார், மகாபுவனேஷ், ரங்கநாதன் (எ) மகேஷ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.


இக்கூட்டத்தில், 1. ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் 2. கழக ஆக்கப்பணிகள் ஆகிய பொருள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளது.

எனவே மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் அன்புடன் கேட்டுக் கொண்டுள்ளார். நிகழ்ச்சியின் நிறைவில் நகர இளைஞரணி அமைப்பாளர் அ. முகமது ராஷிக் ஹனீப் நன்றி கூறுகிறார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடகாடு த. நல்லதம்பி
### மே 30 (2014)



தமது இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு,நாடக மன்றம் ஒன்றினை தானே துவக்கி, அதில் தானும் நடித்து அப்பகுதி முழுவதும் திராவிடக் கொள்கைகளை பரப்பினார். கழகம் துவங்கிய பின்னர் அதில் இணைந்து பணியாற்றினார்.

அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணி இயக்கத்தில் ஆலங்குடி பகுதி தலைவர் – திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட விவசாய அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நிலவள வங்கி தலைவராகவும், இயக்குநராகவும் – மாவட்ட அரசு மருத்துவமனை ஆலோசனை உறுப்பினராக பதவி வகித்தவர்.

1962 விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1964 இந்தி எதிர்ப்பு சட்ட எரிப்பு போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் – 1986 சட்டநகல் எரிப்பு போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றதோடு நெருக்கடி நிலை மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## மாவட்ட அமைப்பாளர் கே.வி.லோகேஷ் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் சிறப்புரை!

திருவள்ளூர் மே 30-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் ஆலோசனை கூட்டம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மோகன்பாபு, டி.சங்கர், கதிரவன், ஜெ. பிரதாப், தில்லை குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூரா் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், ஜூன் 3ஆம் தேதி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் இளைஞரணி நிர்வாகிகள் கழகக் கொடியேற்றி, தோரணங்கள் அமைத்து, ஏழை எளிய மக்களின் பயன்பாட்டிற்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்றார்.


மேலும் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள் உள்ளிட்டவற்றை வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும், கழக அரசின் சாதனைகளை எல்.இ.டி திரைகள் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், “கழகத்தின் நம்பிக்கையாக உள்ள இளைஞர்களாக நீங்கள் தொடர்ந்து சிறப்பாக கழகப் பணியாற்றி, எதிர்காலத்தில் பல்வேறு பொறுப்புகளில் உயர வேண்டும்” என வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளரகள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# ஸ்கேன் ரிப்போர்ட்



நிலைத்தன்மை
இல்லாத
அரசியல்

தனித்தன்மை
இல்லாத
மிக்சர் ஆட்சி

நிர்வாகக்
குழப்பங்கள்

திடமற்ற
வழிநடத்தல்

சட்டம் ஒழுங்கு
சீர் குலைவு

வெளிப்படையான
குதிரை பேரம்

அறுதிப் பெரும்பான்மைக்கு
அலைபாயும்
பரிதாபம்

நகைப்பூட்டும்
சிறுபிள்ளைத்
தனங்கள்

மாண்பு குலையும்
அதிகார
மாடங்கள்

அதிகாரிகளின்
கோலோச்சல்

திரைமறைவு
நிழல்
பீடங்கள்

பயிற்சியும்
முதிர்ச்சியும்
அறவே இல்லாத
அப்ரண்டிஸ்
அமைச்சர்கள்

ஆளுமை
இல்லாத
அரிதாரத்
தலைமை...

நாடகபாணி
நடவடிக்கைகள்

தலைமைக்
கழகமான
தலைமைச் செயலகம்

அதில்
சந்தர்ப்பவாத
சங்கமங்கள்..

தமிழ்த் தாய்க்கும்
தலைக்
குனிவுகள்

ஏமாற்றல்
அறிவிப்புகள்

மக்களை கிராக்குகளாக்கும்
பிரேக்கிங் நியூஸ்
கொடுமைகள்..

அண்டை
மாநிலங்களின்
ஏளனங்கள்...

எல்லாமும்
தமிழகத்தை

பின்னோக்கி
நகர்த்துகிறது

பாடுபட்டு
முன்னெடுத்த

மாநிலத்தின்
வளர்ச்சி
பாழாகும்
பரிதாபத்தில்

மொத்தத்தில்

பரிசோதித்து
பார்க்காமல்
அமேசானில்
வாங்கிவிட்ட
பொருளை

ரிட்டர்ன்
பண்ண வழியிருக்கா என

பரிதவிக்கும்
ஆன்லைன்
அரசியல்
பரிதாபத்தில்

“தமிழ்நாடு”

தடுமாறும்
நாடாக...



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

---

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து, தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு இல்லை என்று த.வெ.க. மின்துறை அமைச்சர் கூறியிருக்கிறாரே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; இதைத்தான், முழுப் பூசணிக் காயை இலைச் சோற்றில் மறைக்க முயற்சிப்பது என்பார்கள்.**

**கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவை இல்லை என்று வெகுமக்களுக்கு நன்றாகவே தெரியும்.**